


தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 25

# தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நீக்கப்படும்




நாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் எதிர்வரும் 1 ஆம் திகதி அதிகாலை 4 மணி முதல் நீக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக இராணுவத்தளபதி ஜெனரல் ஷவேந்திர டி சில்வா தெரிவித்துள்ளார்.

புதிய சுகாதார வழிமுறைகள் விரைவில் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் பரவியுள்ள கொவிட் வைரசின் தாக்கத்தால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கையும், தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகத் தகவல்களின் மூலம் அறியக்கூடியதாகவுள்ள நிலையில் தான், இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

## சாம்பியன்ஸ் லீக் போட்டியில் மெஸ்சி 121 கோல் அடித்து சாதனை



சாம்பியன்ஸ் லீக் தொடரில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் மான்செஸ்டர் சிட்டி அணியை வீழ்த்தியது.

சாம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பிஎஸ்ஜி) அணியும் மான்செஸ்டர் சிட்டி அணியும் மோதின. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 8வது நிமிடத்தில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பிஎஸ்ஜி) அணியின் இட்ரிசா குயே ஒரு கோல் அடித்து அணியை முன்னிலை பெற செய்தார். இதனால் முதல் பாதியில் 1-0 என (பிஎஸ்ஜி) அணி முன்னிலை பெற்றது. (03)

## மதுபானம் இல்லாத திருமண வைபவங்களுக்கு அனுமதி

சிறிய மற்றும் நடுத்தர அளவு திருமண சேவை வழங்குநர் சங்கம் மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் இடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைமை காரியாலயத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. நிலவும் கொவிட் தொற்று பரவல் நிலை காரணமாகக் கடுமையான நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவு திருமண சேவை வழங்குநர் சங்கத்தினால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. (03)

## மூன்றாவது தடுப்பூசி செலுத்த அனுமதி

பூஸ்டர் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியை செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.



## வடக்கில் 680 பாடசாலைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

வட மாகாணத்தில் 200 மாணவர்களுக்கு உட்பட்ட 680 பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் சறோஜினிதேவி மன்மதராஜா சார்ள்ஸ் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் வெளி மாவட்டங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு தனியான பேருந்து சேவையை வழங்கவும் அனுமதி பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, கல்வி அமைச்சுக்கும் மாகாண ஆளுநர்களுக்கும் இடையே இடம்பெற்ற கூட்டத்தில் 200 மாணவர்களுக்கு உள்பட்ட தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான ஆரம்ப பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 200 மாணவர்களுக்கு உட்பட்ட 680 பாடசாலைகள் உள்ளன. அவற்றை உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (03)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## மீண்டும் வழமைக்குத் திரும்பவுள்ள நாடு

உலகமெங்கும் பரவியிருக்கும் கொவிட் வைரசும், அதனது திரிபுகளும் நம் நேசத்துக்குரியவர்களை பலியெடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் அவர்களது ஆத்மா சாந்தியடையவேண்டி எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிரார்த்திக்கும் அதேநேரம், இலங்கையிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பதின்மூவாயிரத்தை அண்மித்துள்ளது. கடந்த காலங்களில் இலங்கை எதிர்கொண்ட சவால்களில் இருந்து தற்போது தளர்வு ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. நாட்டில் நாளாந்த மரணங்களின் எண்ணிக்கையும் தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை அரச தகவல்களில் இருந்து காண முடிகிறது. இதுவரை காலமும் மாறி மாறி இலங்கையில் ஊரடங்கு சட்டம், தனி மைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் என அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில், எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி யில் இருந்து நாடு மீண்டும் வழமை போல இயங்கும் என எதிர்பார்க்க முடியும். எனினும் கடுமையான சுகா தார வழிமுறைகள் தொடர்ந்தும் பின் பற்றப்படவேண்டும் என அறிவுறுத் தப்பட்டுள்ளதுடன், கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அசமந்தப் போக்கில் தயவுடன் மக்கள் செயற்பட வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கிறோம். வளர்ந்துவரும் நாடாகிய இலங்கை இப்பெருந்தொற்றிலிருந்து விரைவில் மீள்வது மிகவும் அவசியம்.

அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களுக்கு ஆலோசனை வழங்கும் ஆராய்ச்சியாளர்களின் ஒன்றியத்தினால் வழங்கப்பட்டுள்ள தரவுகளின்படி, தொற்றுநோயின் மோசமான கட்டம் முடிந்துவிட்டதாகக் கூறலாம் என்பதாக பேராசிரியர் சந்திம ஜீவந்தர ட்விட்டர் பதிவில் வெளியிட்டுள்ளார். இந்த ஆராய்ச்சியாளர்கள் ஒன்பது வெவ்வேறு கணித மாதிரிகளை இணைத்து அடு த்த ஆறு மாதங்களில் தொற்று நோயின் நிலையை திட்டமிட்டுள்ளனர். அவர்கள் தங்கள் முடிவுகளை செப்டம்பர் 22 ஆம் திகதி இணையத்தினூடாக வெளியிட்டுள்ளனர்.

இந்த ஆய்வு குறித்து கருத்து தெரிவித்த பென்சில்வேனியாவைச் சேர்ந்த உயிரியலாளர் பேராசிரியர் கெத்ரியானா ஷியா, தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதனால் அனைவருக்கும் தொற்றுநோயை முடிவுக்கு கொண்டுவர வழிவகுக்கும் என்று கூறினார். "தனிப்பட்ட முறையில், நீங்கள் அனைவரும் தடுப்பூசிகளைப் பெற்றால், உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் ஏற்படும் ஆபத்து கணிசமாகக் குறைந்துவிடும்" என, தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் மக்களின் பொறுப்பை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு




காலாவதியாகும் சகல சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து செப்டம்பர் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியாகும் காலம் அவை காலாவதியான திகதியிலிருந்து மேலும் ஒருவருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து 2021 மார்ச் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் காலாவதியாகவுள்ள சாரதி அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியாகும் காலத்தை மேலும் 6 மாதங்கள் நீடிக்கப்படவுள்ளதாக குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




"அயலவருக்கு உதவுவோம்" திட்டத்தின் கீழ் பொது முடக்கத்தில் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கான நிவாரணப்பொதி வழங்கும் நிகழ்வு அல்-மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது பிரதேசத்தில் நேற்று (29) இடம்பெற்றபோது...

**நாட்டில் மேலும் 61 கொவிட் மரணங்கள் நேற்று (29.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,847 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 941 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 516,465 ஆக அதிகரித்துள்ளது.**

## இலங்கைக்கு தென்கிழக்காக தளம்பல் நிலை உருவாகக்கூடிய சாத்தியம்




இலங்கைக்கு தென் கிழக்காக ஒரு கீழ் வளிமண்டல தளம்பல் நிலை உருவாகக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. எனவே பொதுமக்கள் இவ்விடயம் தொடர்பாக வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகள் குறித்து அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கொழும்பிலிருந்து காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும்.

அனுராதபுரம் - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்
மட்டக்களப்பு - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

## சாம்பியன்ஸ் லிக் போட்டியில்...

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் 74 வது நிமிடத்தில் (பிஎஸ்ஜி ) அணியின் லயோனல் மெஸ்சி ஒரு கோல் அடித்தார். இதனால் 2- 0 என்ற கோல் கணக்கில் (பிஎஸ்ஜி ) அணி முன்னிலை வெற்றி பெற்றது. ஆட்டம் முழுவதும் மான்செஸ்டர் சிட்டி அணியால் கோல் அடிக்க முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் மெஸ்சி அடித்த கோல் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்காக அவர் அடித்த முதல் கோல் ஆகும். மேலும் இது சாம்பியன்ஸ் லீக் போட்டியில் மெஸ்சியின் 121வது கோல் ஆகும்.

## மூன்றாவது தடுப்பூசி...

**இதற்கமைய, 60 வயதுக்கு மேற்பட்டோர், சிறுநீரக கோளாறு, புற்றுநோய் போன்ற பாரதூரமான நோய்களைக் கொண்டுள்ள 30 – 60 வயதுக்கு உட்பட்டோருக்கு இவ்வாறு மூன்றாவது தடுப்பூசி செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**அத்துடன், சுகாதார பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் ஆகியோருக்கும் இவ்வாறு பைஸர் தடுப்பூசியை செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.**

## வடக்கில் 680...

மாகாணத்தில் வெளி மாவட்டங்களிலிருந்து பயணிக்கும் ஆசிரியர்களுக்கு வசதியாக சிறப்பு பேருந்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சரிடம் என் னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய போக்குவரத்து அமைச்சருடன் பேசி அதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஆசிரியர்கள் சுகாதார நடைமுறையின் கீழ் தமது பயணத்தை முன்னெடுக்க முடியும்.

மேலும் ஆசிரியர்களுக்கு அவசர சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க பயிற்சியளிக்க மாகாண சபையின் நிதியில் சுகாதாரத் திணைக்களத்தை முன்னெடுக்க என்னால் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் ஒக்ஸி மீற்றர் உள்ளிட்ட சுகாதார உபகரணங்களை பெற்று ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் வழங்க அதிகாரிகளுக்குப் பணித்துள்ளேன்.

எனவே அனைத்து ஒழுங்குகளும் முடிவடையும் நிலையில் ஆரம்ப பாடசா லைகள் திடீர் அறிவிப்புடன் ஆரம்பிக்கப்படும் என்றார்.

-யாழ். நிருபர் பிரதீபன்-

## மதுபானம் இல்லாத...

இதன்போது, தற்போதைய சட்டக்கட்டுப்பாடுகளின் கீழ் மீண்டும் திருமண வைபவங்களை நடத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

கொவிட் சுகாதார வழிகாட்டலின் கீழ், அனுமதி வழங்கப்படக்கூடிய குறைந்தபட்ச எண்ணிக்கையிலான விருந்தினர்களைக் கொண்டு திருமண வைபவங்களை நடத்த இருதரப்பும் இணக்கம் தெரிவித்ததாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, நடத்தப்படவுள்ள திருமண வைபவங்களை மதுபான உபசாரமின்றி நடத்தவும், பூரணமாகத் தடுப்பூசிகளைப் பெற்றவர்களை மாத்திரம் திருமண வைபவங்களில் கலந்துகொள்ள அனுமதியளிக்கும் வகையிலும் சுகாதார வழிகாட்டல் ஒன்றை தயாரிக்க இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் சிறிய, நடுத்தரளவு திருமண சேவை வழங்குநர் சங்கங்கள் இணக்கம் தெரிவித்த இந்தக் கோரிக்கை கொவிட் பரவலை கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயலணியிடம் முன்வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தென் மாகாணத்தில் உள்ள, 200 மாணவர்களுக்கும் குறைந்த பாடசாலைகளை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக, மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.**

**தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் யாப்பா இதனைத் தெரிவித்துள்ளார். இதற்கான நடவடிக்கைகள், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

## ஆர்.சி.பி வென்றது




**ஐ.பி.எல். தொடரின் 43–வது லீக் ஆட்டம் துபாயில் நேற்று நடைபெற்றது. இதில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் – ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டொஸ் வென்ற ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி கேப்டன் விராட் கோலி பந்து வீச்சை தேர்வு செய்தார்.**

**அதன்படி ராஜஸ்தான் ரோயல்ஸ் முதலில் பெட்டிங் செய்தது. தொடக்க வீரர்கள் எவின் லீவிஸ், ஜெய்ஸ்வால் ஆகியோர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் ஸ்கோர் ஜெட் வேகத்தில் உயர்ந்தது. ராஜஸ்தான் ரோயல்ஸ் பவர்–பிளேயில் 67 ரன்கள் குவித்தது. 8 ஓவர் முடிவில் ராஜஸ்தான் ரோயல்ஸ் 71 ரன்கள் எடுத்திருந்தது. இதனால் எப்படியும் 200 ரன்களை தாண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.**

**பின்னர் 150 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆர்.சி.பி. அணி பெட்டிங் செய்தது. விராட் கோலி, தேவ்தத் படிக்கல் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். விராட் கோலி 25 ரன்னிலும், தேவ்தத் படிக்கல் 22 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.**

**அதன்பின் வந்த ஸ்ரீகர் பரத், மேக்ஸ்வெல் ஜோடி அபாரமாக விளையாடியது. ஸ்ரீகர் பரத் 35 பந்தில் 44 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மேக்ஸ்வெல் 30 பந்தில் அரைசதம் அடிக்க, டி வில்லியர்ஸ் சந்தித்த முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டி ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் 17.1 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 153 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.**

## வீட்டுக்காவலில் மெஹபூபா முப்தி

ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி, தான் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக டிவிட்டரில் தெரிவித்துள்ளார். ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதல்வரும், மக்கள் ஜனநாயக கட்சி தலைவருமான மெஹபூபா முப்தி வெளியிட்ட 'டுவிட்டர்' பதிவில், 'புல்வாமாவின் திரால் நகரில் ஒரு குடும்பத்தை ராணுவ வீரர்கள் தாக்கி உள்ளனர். 'அதில் ஒரு பெண் பலத்த காயமடைந்தார். அவர்களை சந்திக்க செல்வதாக கூறியதால், மீண்டும் என்னை ராணுவம் வீட்டுக்காவலில் வைத்துள்ளது' என கூறி உள்ளார். அத்துடன், வீட்டின் முன் ராணுவ வாகனம் நிற்கும் படத்தையும் வெளியிட்டுள்ளார்.

முன்னதாக மத்திய அரசு கடந்த 2019 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5 ம் திகதி காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்தது. காஷ்மீர், லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரித்து அறிவிப்பு வெளியிட்டது. அப்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முப்தி கைது செய்யப்பட்டு, 14 மாதங்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## உலக சுகாதார அமைப்பின் ஊழியர்களின் மீது குற்றச்சாட்டு

World Health Organization

கொங்கோ குடியரசில் எபோலா நோய் தொற்றைக் கட்டுப்படுத்தும் போது அதில் இருந்த பெண்கள் மற்றும் சிறுமிகளிடம் நிவாரண பணியாளர்கள் மட்டுமன்றி உலக சுகாதார ஊழியர்களும் தகாத முறையில் நடந்துகொண்டதாக தெரியவந்துள்ளது.

கடந்த 2018 மற்றும் 2020 காலப்பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் சுமார் 83 பேருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி குற்றம்சாட்டப்பட்ட ஊழியர்களில் நால்வரின் உடன்படிக்கைகள் ரத்து செய்யப்பட்டன.

மேலும் இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்ட 29 பெண்கள் கர்ப்பமடைந்ததாகவும், அவர்களுள் சிலர் கட்டாயக்கருக்கலைப்புக்குவறுபுறுத்தப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும் குற்றம் புரிந்தவர்கள் மீதும் அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்கள் மீதும் மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.



## ஜப்பானின் புதிய பிரதமராக புமியோ கிஷிடா தேர்வு



ஜப்பான் பிரதமர் யோஷிகிதே சுகா பதவி விலகுவதாக அறிவித்த நிலையில், புதிய பிரதமராக புமியோ கிஷிடே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜப்பானில் கடந்தாண்டு பிரதமராக பதவியேற்ற யோஷிகிதே சுகா, பதவி விலகுவதாக அறிவித்தார். ஜப்பானில் ஆளுங்கட்சியின் தலைவராக இருப்பவரே பிரதமராக பொறுப்பேற்பார். அதன்படி, பிரதமர் சுகா பதவி விலகுவதாக அறிவித்த நிலையில், ஆளுங்கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சிக்குள் அடுத்த பிரதமரை தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற்றது.

அதில் அந்நாட்டின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் புமியோ கிஷிடா ஆளும் லிபரல் டெமாக்ரடிக் கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். 64 வயதான புமியோ கிஷிடா, ஜப்பானின் அடுத்த பிரதமராக வரும் ஒக்.4ம் திகதி பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவிற்கு தலிபான்கள் கோரிக்கை



ஆப்கானுக்கு விமான சேவையை துவக்கவேண்டும் என தலிபான்கள், இந்தியாவிற்கு கோரிக்கை விடுத்து உள்ளனர். ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க ராணுவம் வெளியேறத் துவங்கியதும் கடந்த ஒக.15ம் திகதி ஆப்கானை தலிபான்கள் கைப்பற்றினர். இதனை தொடர்ந்து பல நாடுகள் ஆப்கானிஸ்தானுக்கான விமான சேவைகளை நிறுத்தின. 15ம் திகதிக்கு முன்னரே, இந்தியாவும் விமான சேவையை நிறுத்தியிருந்தது.

காபூல் விமான நிலையத்தை மட்டும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்த அமெரிக்க ராணுவம், ஒக.30ம் திகதி அங்கிருந்து வெளியேறியது. இதையடுத்து தலிபான்களின் கட்டுப்பாட்டிற்குள் காபூல் விமான நிலையம் வந்தது. இதனை தொடர்ந்து, காபூல், சர்வதேச மற்றும் அனைத்து உள்நாட்டு விமான சேவைகளுக்கு தயாராக உள்ளதாகவும், முன்பு போல் விமானங்களை இயக்கவேண்டும் என தலிபான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், ஆப்கானுக்கு பயணிகள் விமான சேவையை துவக்கவேண்டும் என வலியுறுத்தி, இந்திய விமான போக்குவரத்து இயக்குநர் ஜெனரலுக்கு தலிபான்கள் கடிதம் எழுதியுள்ளனர். இந்த கடிதம் தற்போது, மத்திய விமான போக்குவரத்து அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது.

## கனடா : சீனாவின் 5ஜி நெட்வேர்க் அனுமதி குறித்து விரைவில் முடிவு



5ஜி நெட்வேர்க் தொடர்பில் ஹுவாய் நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவது குறித்து இன்னும் சில வாரங்களில் முடிவு எடுக்கப்படும் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ தெரிவித்துள்ளார். இந்தியா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளில் 4ஜி பயன்படுத்தப்பட்டு வருகின்றபோதும், சில நாடுகள் அடுத்த தலைமுறையான 5ஜி வயர்லெஸ் நெட்வேர்க்கை பயன்படுத்த தொடங்கியுள்ளன.

சீனாவின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு நிறுவனமான ஹுவாய் இந்த 5ஜி சேவையை வழங்கி வருகிறது. இதேவேளை பெரும்பாலான நாடுகள் 5ஜியை பயன்படுத்துவதால், தங்களுடைய நாட்டின் ரகசியங்கள் திருடப்படுவதாக அனுமதி கொடுக்காமல் இருக்கின்றன. அத்துடன் இதுகுறித்து அமெரிக்காவும் ஹுவாய் நிறுவனத்தின் மீது குற்றம் சுமத்தியுள்ளது. இந்தியாவில் சோதனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கனடாவில் 5ஜி நெட்வேர்க் வழங்க ஹுவாய் நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவது குறித்து சில வாரங்களில் முடிவு செய்யப்படும் என பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ கூறியுள்ளார்.

எனினும், கனடாவின் தொலைத்தொடர்பு நிறுவனங்களான பெல் கனடா, டெலஸ் கார்பரேசன் போன்ற நிறுவனங்கள் ஹுவாய் 5ஜி நெட்வேர்க்கை பயன்படுத்த மாட்டோம் எனத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கனடாவும் அதன் பாதுகாப்பு நிறுவனங்களும் ஹுவாய் நிறுவனத்தில் இருந்து உபகரணங்களைப் பயன்படுத்தலாமா? என்று ஆய்வு செய்து வருகின்றன. இதேவேளை தொலைபேசி சாதனங்கள் ஐந்தாம் தலைமுறை தொழில்நுட்பத்தை உருவாக்கத் தயாராகிவருவதுடன், இது மருத்துவ சாதனங்கள், பிற பயன்பாடுகளுக்கு வசதியாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிங்கப்பூரில் மக்கள் தொகை வீழ்ச்சி



சிங்கப்பூர் மக்கள் தொகை கடந்த ஆண்டை விட ஜூன் நிலவரப்படி 4.1 சதவீதம் குறைந்துள்ளது என்று அந்நாடு வெளிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் கொரோனா காரணமாக பொருளாதாரம் மந்தமாகவே நீடிக்கிறது. இதன் காரணமாக மக்களின் அன்றாட வாழ்விலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் வருடாந்த மக்கள் தொகை அறிக்கையை சிங்கப்பூர் அரசு வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, சிங்கப்பூரின் மக்கள் தொகை 1970ம் ஆண்டுக்குப் பிறகு வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. கடந்த ஜூன் மாத நிலவரப்படி நாட்டின் மொத்த மக்கள் தொகை கடந்த ஆண்டை விட 4.1 சதவீதம் குறைந்துள்ளது. மேலும், சிங்கப்பூரில் நிரந்தரக் குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை 6.2 சதவீதம் குறைந்துள்ளது.

மற்ற நாடுகளைப் போல சிங்கப்பூரில் பிறப்பு விகிதம் குறைந்தும், வயதானவர்கள் எண்ணிக்கை அதிகரித்தும் வருகிறது. சிங்கப்பூரின் தற்போதைய மக்கள்தொகை 59 லட்சம் ஆகும். மக்கள் தொகை சரிவைத் தொடர்ந்து கொரோனா காலத்தில் மக்கள் தொகையை அதிகரிக்க குழந்தை பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு சலுகைகளை அரசு அறிவித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேரழகியாய் ஜொலித்த இளவரசி



லண்டனில் நடந்த No Time to Die என்ற ஜேம்ஸ் பாண்ட் படத்தின் ப்ரீமி யர் ஷோவில் தங்க நிற கவுனில் வந்து அசத் தியுள்ளார் பிரித்தானியா இளவரசியான கேட் மிடில்டன். ஜேம்ஸ் பாண்டின் நடிப் பில் அக்ஷன் காட்சிகளுடன் உருவான படம் No Time to Die. இதுவரை வெளியான ஜேம்ஸ் பாண்ட் படங்களைவிட, இந்த படத்தின் ரன்னிங் டைம் அதிகம். சுமார் 2 மணி 43 நிமிடங்கள்.

இப்படத்துக்கான ப்ரிமீயர் ஷோ, Royal Albert Hallல் நடந்தது. ஏராளமான திரைப்பிரபலங்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இந்த விழாவுக்கு இளவரசர் சார்லஸ், அவரது மனைவி கமிலா, இளவரசர் வில்லியம்ஸ் மற்றும் அவரது மனைவி கேட் மிடில்டன் வருகை தந்தனர். தங்க நிற கவுனில் வலம் வந்த கேட் மிடில்டனின் புகைப்படங்கள் வைரலாகி வருகிறது.

## 02 இல் ஒருவர் கொவிட் தடுப்பூசி பெற்றுள்ளனர் - ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்

உலக மக்கள் தொகையில் சுமார் 45 சதவீதம் பேர் அதாவது 352 கோடி மக்கள் கொவிட் தடுப்பூசியின் ஒரு டோஸாவது போட்டுள்ளதாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் தரவு திட்டம் புள்ளிவிபரங்களை தொகுத்து வெளியிட்டுள்ளது.

கொவிட் வைரஸ் தொற்று உலகளவில் வெடித்து கிளம்பியதும், சிகிச்சைக்கு என்ன மருந்து தருவது என்ற குழப்பம் வல்லரசு நாடுகளிடமே இருந்தது. வைரஸ் தொற்று உலகளவில் பரவத் தொடங்கிய சில மாதங்கள் ஆகியிருந்த நிலையில், பாரத் பையோடெக், அஸ்ட்ராசெனகா, ஜோன்சன் மற்றும் மொடர்னா, பைசர், சினோபார்ம் போன்ற நிறுவனங்கள் தடுப்பூசி ஆராய்ச்சியில் ஈடுபட்டு மிக விரைவில் அவற்றை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தன. தமிழகம் போன்று உலகின் பல பகுதிகளிலும் தடுப்பூசிக்கு எதிரான பிரசாரங்கள், புரளிகள் பரப்பப்பட்டன. இரண்டாம் அலை ஏற்பட்டு அக்கம் பக்கத்தில் நடமாடிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் திடீர் என சில நாட்களில் இறந்து போனதை கண்ட மக்கள் தடுப்பூசியை நோக்கி வர ஆரம்பித்துள்ளனர். குறைந்த வருவாய் கொண்ட நாடுகளில் 0.5 சதவீதம் மக்கள் மட்டுமே தடுப்பூசி போட்டுள்ளனர். ஆபிரிக்க கண்டம் தான் இருப்பதிலேயே மிகக் குறைந்த அளவாக 6.7 சதவீத மக்களுக்கு மட்டுமே ஒரு டோஸ் தடுப்பூசி செலுத்தியுள்ளது.